# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,559 – 1965 නොවැම්බර් 17 වැනි බදාදා — 1965.11.17

14,559 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

## அரசாங்க அறிவித்தல்கள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந் உ.

எம். டி. பண்டா,
விவசாய, உணவுப் பகுதி அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட தேதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்கானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1965. 8.31 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), களுத்துறை மாவட்டம் .. | உப உணவுப்பொருள்கள்.. மருந்துப்பருப்பு | 1965.9.4 தேதியைக் கொண்ட 14,497 ம் இலக்கம் |
| 1965. 9. 8 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நுவரெலியா மாவட்டம் .. | மாட்டிறைச்சி, ஈரல் ஆட்டிறைச்சி | 1965.9.11 தேதியைக் கொண்ட 14,504 ம் இலக்கம் |
| ஷை .. | ஷை .. | உப உணவுப்பொருள்கள்.. | ஷை |
| 1965. 9.11 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொழும்பு மாவட்டம் .. | ஷை .. | 1965.9.14 தேதியைக் கொண்ட 14,506 ம் இலக்கம் |
| 1965. 9. 7 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), பொலன்னறுவை மாவட்டம் | ஷை .. | ஷை |
| 1965. 9.15 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மொனராகலை மாவட்டம் | ஷை .. | 1965.9.25 தேதியைக் கொண்ட 14,514 ம் இலக்கம் |
| 1965. 9.23 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தளை மாவட்டம் .. | ஷை .. | ஷை |
| 1965. 9.28 .. | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. .. | ஷை .. | 1965.9.29 தேதியைக் கொண்ட 14,516 ம் இலக்கம் |
| 1965. 9.21 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொழும்பு மாவட்டம் .. | ஷை .. | 1965.9.30 தேதியைக் கொண்ட 14,517 ம் இலக்கம் |
| 1965. 9.29 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தளை மாவட்டம் .. | மாட்டிறைச்சி .. | 1965.10.5 தேதியைக் கொண்ட 14,525 ம் இலக்கம் |
| 1965.10. 8 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), காலி மாவட்டம் .. | உப உணவுப்பொருள்கள்.. | 1935.10.12 தேதியைக் கொண்ட 14,532 ம் இலக்கம் |

11-912

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. சி. 402

உப உணவுப் பொருட்கள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி பின்னதுவகே ஆதர் சில்வா ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ந் தேதி வெளியான 14,516 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ந் தேதியைக் கொண்ட சி. 401 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும் மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விற்றலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திரும்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்குகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இறுத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும்-குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ந் திகதியன்று கொழும்பில் பிற்பகல் 4.30 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

பி. ஆ. சில்வா,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்குமதி விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இறுத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெண்காயம் (சிக்பெலாபூர் சிறு வெண்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) | 23 0 | 24 0 | 0 28 |
| கொத்தமல்லி | 47 0 | 48 50 | 0 52 |
| முழு உழுந்து | 44 0 | 45 25 | 0 46 |
| பாசிப்பயறு | 39 50 | 40 75 | 0 41 |
| துவரம்பருப்பு | 47 75 | 49 0 | 0 50 |
| கடலைப்பருப்பு | 46 25 | 47 50 | 0 48 |
| புளி | 42 0 | 44 0 | 0 50 |
| உருளைக்கிழங்கு | 24 0 | 25 0 | 0 27 |
| சிறு வெண்காயம் | — | 24 0 | 0 28 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையையுடைய ஒரு விற்பனையைக் குறிப்பதாகும்.

11—867

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.